# திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் வழங்கிய விவிலியச் சிலுவைப்பாதை

***முதலாம் நிலை : இயேசு கெத்சமனித் தோட்டத்தில் செபிக்கிறார்***
***நற்செய்தி : லூக்கா 22: 39-44***
***சிந்தனை:*** *மனித வாழ்வில் சோதனைகள் தொடர் கதையாகவே உள்ளன. சோதனைகளை எதிர்கொள்ளாத மனிதன் உலகில் இல்லையென்றே சொல்லலாம். சோதனைகள் முன்னேற்றப்பாதைக்குத் தடைக்கல் தான். அதை வென்று வெற்றி கொள்பவனே முழு மனிதன் ஆவான். இறைமகன் இயேசு தந்தையிடம் சோதனைகளை வென்றிட செபித்தார். சோதனையை சாதனையாக மாறினார்.*

***செபம்:*** *ஆண்டவர் இயேசு சோதனையை வெல்லத் தந்தையிடம் வேண்டியது போல் நாமும் சோதனைகள் ஏற்படும் காலங்களில் ஆண்டவரிடம் செபித்துச் சோதனையை வெல்வோமாக.*

***இரண்டாம் நிலை : யூதாசு முத்தமிட இயேசு கைதுச் செய்யப்படுகிறார்.***
***நற்செய்தி : லூக்கா 22: 47-48***
***சிந்தனை:*** *நம் உறவுகளில் நண்பர்களில் யூதாசைப் போல் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் நம்மோடு நெருங்கிப் பழகி, உறவாடி, உரையாடி, தங்களுக்கான காரியங்களை நிறைவேற்ற உறவுகளையும், பழகிய நண்பர்களையும் துச்சமென எண்ணிக் காட்டிக் கொடுத்துத் தங்கள் தேவைகளைச் சாதித்துக் கொள்கிறார்கள். இதன் நிமித்தம் மற்றவர்கள் படும் துன்பதுயரங்களையும், வேதனைச் சோதனைகளையும் நினைத்துப் பார்த்தால் இவ்வாறு செய்யமாட்டார்கள்.*

***செபம்:*** *நம்முடைய சுயநலனுக்காக உற்றார், உறவினர்கள், நண்பர்களை அடுத்திருந்து கெடுக்காமல் நீதி, நேர்மையோடு வாழ வரம் கேட்டுச் செபிப்போம்.*

***முன்றாம் நிலை : இயேசு தலைமைக்குருக்களால் தீர்ப்புக்குளாகிறார்***
***நற்செய்தி : லூக்கா 22: 66-70***
***சிந்தனை:*** *பல சந்தர்ப்பங்களில் உண்மை நிலையை எடுத்துச் சொன்னால் பலர் நம்ப மறுப்பார்கள். இவன் என்ன அவ்வளவு பெரிய ஆளா? இவன் சொல்வது உண்மைத் தான் என எப்படி நம்புவது? இவனுக்கு இவ்வளவு செல்வாக்கும், புகழும், பெருமையும் எப்படிக் கிடைத்தன? இவன் சொல்வது எல்லாமே பொய்யும், புரட்டும் தான் எனக் கூறிக் கேலியும், கிண்டலும் செய்பவார்கள். பின்பு உண்மை நிலையை அறிந்தப் பின் பேசியதற்காக நாணி, கூனி, குறுகி*

*நிற்பார்கள். ஆனால் மன்னிப்பு மட்டும் கேட்க மாட்டார்கள். தீர்ப்பிடும் முன் சிந்திப்போம்..*

***செபம்**: இறைமகன் இயேசுவே! நீர் கடவுளின் மெசியா. உலக மீட்பர் என்பதை நாங்கள் அனைவரும் உளமாற விசுவாசிக்கின்றோம். தந்தையின் இல்லத்தில் எங்களுக்கு நிலைவாழ்வை அருள வேண்டுமென்று மன்றாடுவோம்.*

***நான்காம் நிலை : இயேசுவை பேதுரு மறுதலித்தார்***
***நற்செய்தி : லூக்கா 22: 54-60***

***சிந்தனை:** மூன்று ஆண்டுகள் இயேசுவுடன் இணைந்து, உறவாடி, உரையாடி, அவர் சென்ற இடமெல்லாம் உடன் சென்று அற்புதங்களையும், அரும் அடையாளங்களையும் கண்டவர் பேதுரு. இருப்பினும் இவரை எனக்குத் தெரியாது என்று இரண்டு முறையும், "நீ" குறிப்பிடுபவரை எனக்குத் தெரியவே தெரியாது என மூன்றாவது முறையும் மறுதலித்துச் சத்தியம் செய்கிறார். நாமும் பல நேரங்களில் நம் கண்முன் நடைபெறும் எவ்வளவோ காரியங்கள் நமக்குத் தெரிந்திருந்தாலும் அவற்றில் உண்மை சொல்லாமல் பயந்து ஒதுங்கி விடுகிறோம். இப்படிப்பட்ட கோழைத்தனத்திலிருந்து நாம் எப்போது விடுபடுவோம்?*

***செபம்:** நம் முன்னால் நடக்கும் அக்கிரமங்களையும், அநியாயங்களையும் கண்டும் காணாதவர்கள் போல் இருக்கமால் நீதி, நேர்மையோடு நியாயம் பேசி உண்மையை நிலைநாட்டத் துணிவு பெற வரம் அருள வேண்டுமென்று மன்றாடுவோம்.*

***ஐந்தாம் நிலை : இயேசுவுக்கு பிலாத்து மரணதண்டனை விதிக்கிறார்.***
***நற்செய்தி : மத்தேயு 27: 11-14***

***சிந்தனை:** ஆளுநன் பிலாத்து இயேசுவைப் பார்த்து நீ யூதரின் அரசனா? எனக் கேட்டான். பிலாத்துவுக்கு அன்றைய நிலைமைப் புரியவில்லை. அறியாமையும், "தான் உரோமை ஆளுநன்" என்ற அகந்தையும் சேர்ந்து அவனை அவ்வாறு பேசத்தூண்டியது. இயேசு அவனது கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. காரணம் அவர் புகழையும் பெருமையையும் விரும்பாமல் இருந்ததால் தான்.*

***செபம்:** ஆண்டவரே நாங்கள் எப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்தாலும் தற்பெருமைக்கும் வீண் கௌரவத்திற்கும் இடம் கொடமால் தாழ்ச்சியுடன் எளிய வாழ்வு வாழ நல்ல மனதைத் தந்து வழிநடத்திடச் செபிக்கின்றோம்.*

***ஆறாம் நிலை : இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு முள்முடி சூட்டப்பட்டார்.***
***நற்செய்தி : யோவான் 19: 1-3***

***சிந்தனை:** அவனிடம் குற்றம் ஒன்றும் காணவில்லை என்று சொன்ன பிலாத்து*

*குற்றமற்ற இயேசுவுக்கு உண்மைக்கு எதிரான தீர்ப்பை வழங்கினான். மாசு மறுவற்ற உத்தமர் இயேசுவை அநியாயமாகத் தீர்ப்பிட்ட பிலாத்து. தன் பதிவிக்கு ஆபத்து வந்துவிடும் என உண்மை என்ன என்பதை அறிய முயற்சி செய்யாமல் பொய்யான தீர்ப்பு வழங்கிவிட்டுத் தண்ணீரால் கைக் கழுவி "இவனது இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை" என நழுவினான். தன் மனைவியால் எச்சரிக்கப்பட்டும் இவ்வாறு செய்து தனது பதவியை தக்க வைத்துக் கொண்டான். நம் நிலை என்ன?*

***செபம்:*** *தீர்ப்புச் சொல்ல எழும் எந்த நாவையும் நீ அடக்கி விடுவாய். இவையே ஆண்டவரது உரிமைச் சொத்து (எசாயா 54:17)ஆண்டவரே பல சந்தர்பங்களில் எது உண்மை? எது பொய் என அறியாது, உண்மை நியாயத்தைக் குழித் தோண்டிப் புதைத்து விடுகின்றோம். இவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டு நீதி, நேர்மைக்குச் சான்றுப் பகரக்கூடிய தைரியத்தையும், திடமான நல் மனதையும் தந்திடச் செபிக்கின்றோம்.*

***ஏழாம் நிலை : இயேசு சிலுவையைச் சுமக்கிறார்***
***நற்செய்தி : யோவான் 19: 16-17***
***சிந்தனை:*** *இயேசு ஆண்டவர், இறைமகன் கடவுளின் திருமகன். ஆனாலும் தந்தையின் திட்டத்தை நிறைவேற்றவும், நம் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் சிலுவையைத் தானே சுமந்துச் செல்கிறார். அவர் அழைத்திருந்தால் ஆயிரம் பேர் அருகில் வந்து சிலுவையைச் சுமந்து உதவி செய்திருப்பார்கள். ஆனால் இயேசு அவ்வாறு செய்யவில்லை. சிலுவையைத் தானே சுமந்துச் சென்றார். இது நிமித்தம் மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். துன்பங்களைச் சுமந்து கொண்டார்.*

***செபம்:*** *ஆண்டவரே எங்களுக்கு வருகின்ற துன்பதுயரங்களச் சோதனை வேதனைகளை மனமுவந்து தாங்கிக் கொள்ள மனம் தாரும். இயேசுவே நாங்கள் எதிர்கொள்ளும் எல்லாக் கஷ்டங்களையும் நீர் சுமந்தச் சிலுவையின் பாரத்தை நினைவிற்கொண்டு அவற்றை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள வரம் தாரும்.*

***எட்டாம் நிலை : இயேசுவுக்கு சீமோன் உதவுகிறார்***
***நற்செய்தி : லூக்கா 23: 26***
***சிந்தனை:*** *சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுக்கு மனமுவந்து உதவி செய்ய முன் வரவில்லை. படை வீரர்களின் கட்டாயத்தால் தான் உதவி செய்யச் சம்மதித்தான். பெருஞ்சுமைச் சுமந்துப் சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்ச்சியும் உடையவன். என் நுகம் அழுத்தாது. என் சுமை*

*எளிதாயுள்ளது என்கிறார் நம் ஆண்டவர். சீமோன் செய்த உதவியால் சிலுவையின் சுமை எளிதானதை இயேசு உணர்ந்தார்.*

***செபம்:*** *பிறரன்பு, பிறர் சிநேகம், உதவிகள் செய்யும் மனம் நம்மில் அநேகரிடம் இல்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பிறர்படும் துன்பத்தை நாம் அறிந்து, உணர்ந்து நம்மால் முடிந்த அளவு உதவிகள் செய்ய ஆர்வம் கொள்ள வேண்டும். நமது ஆர்வத்தை ஆண்டவர் ஆசீர்வதித்து வழிக் காட்டுவார்*

***ஒன்பதாம் நிலை : இயேசு வழியில் எருசேலம் பெண்களை சந்திக்கிறார்.***
***நற்செய்தி : லூக்கா 23: 27-29***

***சிந்தனை:*** *எருசலேம் பெண்கள் உம் வேதனையைக் கண்டு துடித்துக் கதறியப் போது அவர்களுக்கு நீர் ஆறுதல் அளித்தீர். நீர் அளித்த ஆறுதல் அப்பெண்களுக்கு எப்படிப்பட்ட மனதிடத்தையும் சமாதானத்தையும் கொடுத்திருக்கும்? இதைவிட மேலான அன்பு வேறு யாரால் கொடுக்க முடியும்? வேறு எங்கே கிடைக்கும்? நித்திய வாழ்வின் ஊற்றும், வாழ்வும், வழியும் நீர் தானே ஐயா!.*

***செபம்:*** *வல்லமையுள்ள தந்தையே! உமது மகனின் இந்த வார்த்தைகளை நாங்களும் எச்சரிக்கையாக ஏற்று எங்கள் பாவங்களுக்காகவும், எங்களது மக்களின் பாவங்களுக்காகவும் கண்ணீர் விட்டு வருந்துகிறோம். எங்களை உமது திருக்கரங்களால் வழி நடத்தும்.*

***பத்தாம் நிலை : இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்***
***நற்செய்தி : யோவான் 19: 17-19***

***சிந்தனை:*** *இயேசு சிலுவையில் அறைப்பட்டதன் விளைவாகத் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றித் தந்தையை மகிமைப்படுத்துகிறார். கெத்சமனித் தோட்டத்தில் "தந்தையே உமக்கு விருப்பமானால் இத்துன்பக்கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும். எனினும் என் விருப்பமன்று. உம் விருப்பமே நிறைவேற்றும்" எனக்கூறிச் செபித்த ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டதன் மூலம் அதைச் செயலில் காட்டுகிறார்.*

***செபம்:*** *அன்பான இயேசுவே! உம்மால் மீட்கப்பட்ட நாங்கள் உம்மைப் புகழ்ந்து மகிமை தராமல் உமக்கு வேதனையைத் தந்து மனம் நோகச் செய்திருக்கிறோம். உம்மை விட்டு பிரியாமல் என்றும் உம்மோடு ஒன்றித்து வாழ அருள் புரியும்.*

***பதினொன்றாம் நிலை : இயேசு கள்வனுக்கு விண்ணக வாழ்வை அளிக்கிறார்***
***நற்செய்தி : லூக்கா 23:39-43***

***சிந்தனை:*** *இயேசுவின் இலட்சிய வாழ்வு முடிந்தது. இயேசு எதற்காக*

*இவ்வுலகிற்கு வந்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றிவிட்டார். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அஃது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் அது மிகுந்த பலனளிக்கும். இந்த நிலையிலும் உடன் இருந்த கள்வனுக்கு இரக்கம் காட்டி விண்ணுலக வாழ்வை அளிக்கிறார். அவர் அன்பிற்கு எல்லை தான் உண்டோ?*

***செபம்:*** *அன்பான இயேசுவே! நாங்கள் உமது இரக்கத்தை மறந்து வீணான ஆசாபாசங்களில் எங்கள் வாழ்நாளைக் கழிக்கின்றோம். எங்கள் குற்றங்களைப் பாராமல் எங்களை மன்னித்து அருள் நெறியில் வாழ வரம் தாரும்.*

***பனிரெண்டாம் நிலை : இயேசு தன் தாயிடம் பேசுகிறார்***
***நற்செய்தி : யோவான் 19: 26,27***
***சிந்தனை:*** *தன் மகனின் அரும் செயல்களைக் கண்டு வியந்து, மகிழ்ந்த மரியாள் இப்போது இயேசு சிலுவையில் தொங்கும் காட்சியைப் பார்த்து அழுகிறாள். துடிக்கிறாள். என்ன செய்வது? இஃது இறைவனின் திட்டமல்லவா? மரியாள் மகனைப் பார்க்கிறாள். மகன் தாயைப் பார்க்கிறார். அந்தப் பார்வையில் அவர்கள் பேசிக் கொண்டது எவ்வளவோ! எத்தகையதோ! நாம் அறியோம். அம்மா இதோ உம் மகன் என்று கூறி மனுக்குலத்தையும், இதோ உன் தாயென்று கூறி இவ்வுலகையும் தன் தாயிடம் ஒப்படைக்கின்றார். இது முதல் மரியா நமக்காகவும் தாயாக அர்ப்பணிக்கப்பட்டதை எண்ணிப் பெருமை கொள்வோம். இயேசுவுக்கு நன்றி சொல்வோம்.*

***செபம்:*** *அன்பான இயேசுவே! உமது தாயாகிய மரியாளை எமக்குக் கொடுத்து வாழ்வை வளமாக்கியது போல நாங்களும் உமக்கு ஆறுதலாக இருக்க எங்களது எளிய வாழ்வின் மூலம் வேதனைப்படுவோர், துயருறுவோர், ஆதரவற்றோர் அனைவருக்கும் எங்களால் முடிந்த உதவிகள் செய்து உம்மை மனமகிழச் செய்ய அருள் புரியும்.*

***பதிமூன்றாம் நிலை : இயேசு சிலுவையில் மரித்தார்.***
***நற்செய்தி : யோவான் 19: 28-30***
***சிந்தனை:*** *நம்மை அன்புச் செய்து அரவணைத்துக் காத்து வாழ்வு அளித்து வழி நடத்திய தெய்வம் இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறக்கின்றார். நமக்காக நமது மீட்புக்காக உயர் துறக்கின்றார். நாங்கள் உம்மால் தேர்ந்து கொண்ட மக்களாக இருந்தபோதிலும், உம்மை அறிந்து கொண்டு உமக்காகவே வாழும் மக்களாக உம்மோடு பயணிக்க எம்மைப் பலப்படுத்தும். எங்களது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் நீர் சிந்திய இரத்தத்தால் எம்மைக் கழுவும். தூய ஆவியால் எம்மை நிரப்பும்.*

***செபம்:*** *எமக்காக உயிரைக் கொடுத்த என் இயேசுவே எந்நாளும், எப்போதும் நாங்கள் உமக்குரிய மக்களாக வாழ உமது இரக்கத்தையும், கிருபையையும் பொழிந்தருளும்.*

### *பதிநான்காம் நிலை : இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.*

***நற்செய்தி : மாற்கு 15: 43-46***

***சிந்தனை:*** *இறைஇயேசு கல்லறையில் வைக்கப்படுகின்றார். "இவரே என் அன்பார்ந்த மகன். இவரிடம் பூரிப்படைகின்றேன்." "நானே உலகின் ஒளி! என்னைப்பின் செல்பவன் இருளில் நடவான்" என்ற வாக்குக் கல்லறையில் புதைந்து மண்ணாகி விடவில்லை. காரணம் அவர் கூறியபடி மரித்த மூன்றாம் நாள் மீண்டும் உயிர்பெற்றார். அவரது உயிர்ப்பை எந்தச் சக்தியாலும் தடுத்திட முடியவில்லை. வெற்றியின் மன்னனாக மீண்டும் வல்லமையோடு, மாட்சியோடு ஒளியாக எழுகின்றார். அவரது பிள்ளைகளாகிய நாம் நமது பாவ வாழ்விலிருந்து மரித்துப் உயிர்பெற்று புதுவாழ்விற்கு செல்ல அருள் வேண்டுவோம்.*

***செபம்:*** *உமது உயிரை எமக்களித்து எம்மை மீட்ட இயேசுவே! உமது மரணத்தின் மூலமாக நாங்கள் புதுவாழ்வுக் காண எங்கள் துன்பத்தை உமது பாதத்தில் வைக்கிறோம். வல்லமையுள்ள தேவனே நடுத்தீர்க்கும் நாளில் இறந்தோர் யாவரையும் உயிர்ப்பிக்கவும், உமது அரசில் சேர்க்கவும் அருள்புரிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

### *பதினைந்தாம் நிலை : இயேசு உயிர்த்தெழுந்தார்.*

***நற்செய்தி : மாற்கு 16: 4-6***

***சிந்தனை:*** *கல்லறைத் திறந்தது. காரிலுள் மறைந்தது. கிறிஸ்து உயிர்த்தார். உயிர் விடுதல் தான் உண்மையான அன்பு என்கிறோம். அந்த உயிரைத் தான் இயேசு நமக்காகக் கொடுத்தார். துன்பம் உண்டு என்றால் அதன் பிறகு இன்பம் தான். இயேசு நமக்காக வாழ்ந்தார். நமக்காக மரித்தார். நமக்காக உயிர்த்தார் என்ற விசுவாசத்தோடு, நம்பிக்கையோடு உணர்வுப்பூர்வமாகச் சகோதரர்களாக வாழ்வோம்.*

***செபம்:*** *சமுதாயச் சீர்கேட்டை நீக்கிட நீதியின் குரல் ஒலிக்கப் பிறரின் உயர்வில் மகிழ உயிர்த்த ஆண்டவரை நோக்கிச் செபிப்போம். அவர் நம் அனைவருக்கும் சமாதானத்தையும், மன அமைதியையும் ஒற்றுமையையும் தந்தருள மன்றாடுவோம்.*

**தொகுத்தளித்தவர்: திருமதி ரெஜினா சின்னப்பன்.**

www.anbinmadal.org

**தனிச் சுற்றுக்கு மட்டும்**